REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 1உ வெள்ளி (16—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 2உ சனி (17—12—55) [இதழ் 168

## சேலத்தில் கிடைக்கும் கனிச் செல்வம்!

சென்னை மாநிலத்திலுள்ள சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத் தொடரில் பல ரகங்களிலுமாக சுமார் 60 இலட்சம் டன் 'பாக்சைட்' புதைந்து கிடப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவற்றில் குறைந்தபட்சம் 20 இலட்சம் டன்னுவது மிக உயரிய ரக 'பாக்சைட்'டாக இருக்குமென நம்பப்படுகிறது.

புயல், வெள்ளம்:

# பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுச்செயலாளர்

## கொடுமைக்காளான மக்களுக்கு ஆறுதல்

### ஆக்கவேலையில் தீவிரமாக ஈடுபட கழகத் தோழர்கட்கு வேண்டுகோள்

கொடும் புயல், பெருமழை, கோர வெள்ளம் இவற்றால் பாதிக்கப்பட்டு, இன்னல் பலவற்றிற்கு ஆளாகிக் கண்ணீர் வடித்து நிற்கும் தஞ்சை, இராமநாதபுரம், திருச்சி, மதுரை மாவட்ட மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆறுதல் அளிக்கவும், ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் கண்டறியவும், கழகத் தோழர்களையும் இதரர்களையும் நிவாரண வேலைகளில் முழு மூச்சுடன் ஈடுபடச் செய்யவும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இந்தக் கிழமைத் துவக்கத்தில், தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ, மற்றும் கழகத் தோழர்களுடன் தஞ்சையில் நிலைமைகளைக் கண்டறிந்த பின்னர், புதுக்கோட்டைப் பகுதிகளையும் பார்த்துவிட்டு, இராமநாதபுரம் பகுதிகளைப் பார்வையிட்டிருக்கிறார்.

இராமநாதபுரம் பகுதிகளைப் பார்வையிடும்போது மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து, பொதுச்செயலாளர் குழுவுடன் சேர்ந்துகொண்டு, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கின்றனர்.

*முழு விவரங்களும் கிடைக்கவில்லை. இதுவரை கிடைத்துள்ள விவரங்கள் மட்டும் தரப்படுகின்றன:*

## காரைக்குடியில்

*காரைக்குடி, டிச. 13—*

இந்நகருக்கு தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், என். எஸ். இளங்கோ அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பின், இன்று இரவு பன்னிரண்டு மணி அளவில் காரைக்குடி வந்து சேர்ந்தனர்.

இன்று காலையில் இந்நகரில் புயலால் மிகவும் சேதப்பட்ட பகுதிகளாகிய மீனாட்சிபுரம், அழகப்பா கல்லூரி, இடையர் தெரு, புதுச்சந்தப்பேட்டை, செஞ்சை ஆகிய பகுதிகளையெல்லாம் பார்வையிட்டுவிட்டு தேவகோட்டை, திருவாடனைப் பகுதிகளைக் காணச் சென்றனர்.

காரைக்குடியில், பத்திரிகை நிருபர்களையும், புயல் நிவாரணக் குழுவினரையும் சந்தித்து விவரம் அறிந்துகொண்டு திருப்பத்தூர் வழியாக மதுரைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

## மேலூரில்

### துயருற்ற மக்களுக்கு ஆறுதல் கூறினர்

புயல் பகுதிகளைப் பார்வையிட்டு வந்த தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தஞ்சை மாவட்ட செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் 18-12-55 இரவு 7½ மணிக்கு மேலூர் வந்து சேர்ந்தார்கள்.

தலைமைக் கழக அறிவிப்பின்படி பொதுச்செயலாளர் வருகையை எதிர்பார்த்திருந்த நகர்ச் செயலாளர் தோழர் ப. தங்கவேலர், துணைச் செயலாளர் தோழர் வெ. கொடைமன்னன், பொருளாளர் தோழர் மு. இராமு, மாவட்டப் பிரதிநிதி தோழர் முத்து சந்திரநியாகராசன், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும், பொதுமக்களும் பொதுச்செயலாளரை வரவேற்றார்கள்.

ஒரு மணி நேரம் வரை நகரில் தங்கி, புயல் சேதப் புள்ளி விவரம்

(4-ம் பக்கம் பார்க்க)

## செஞ்சீனாவிலிருந்து அரிசி பெற மறுப்பு

### இந்தோனேஷ்யாவின் முடிவுக்குக் காரணமென்ன?

*ஜாகர்தா, டிச. 15—*

மக்கள் சீனா வழங்குவதாகத் தெரிவித்திருந்த அரிசியை, 'விலை மிக அதிகமாயிருக்கிறது' என்று கூறி, இந்தோனேஷியா வாங்க மறுத்துவிட்டதாக இந்தோனேஷிய செய்தி நிறுவனம் ஒன்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

"எவ்வளவு சீக்கிரம் அந்த அரிசி தரப்பட முடியும் என்பதும் நிச்சயமில்லாதிருக்கிறது; நமக்கு உடனடியாக அரிசி தேவையாயிருக்கிறது; வேறு நாடுகள், சீக்கிரமே அரிசி வழங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன"

என்றும், அந்த நிறுவனம் தெரிவித்திருக்கிறதாம்.

## "'கோமின்பார்ம்' அமைப்பு 'பஞ்சசீல'த்திற்கு முரணானதல்ல"

### நேருவின் கருத்துக்கு ரஷ்ய தலைவர்கள் மறுப்பு

*புதுடில்லி, டிச. 15—*

"சர்வதேசத் தொடர்பு, கூட்டுறவு இவற்றிற்காகக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் பொதுவாக ஒப்புக்கொண்டிருக்கிற ஒரு அமைப்பான 'கோமின்பார்ம்' ஏன் கலைக்கப்பட வேண்டும்? 'கோமின்பார்ம்' கலைக்கப்பட வேண்டும் என்று பேசுபவர்கள், பல சமூக ஜனநாயகக் கட்சிகளை இணைக்கிற 'சோஷலிஸ்டு இண்டர்நேஷனல்' என்ற அமைப்பின் நடவடிக்கைகளைப் பற்றி ஏன் பேசுவதில்லை?

"தொழிலாள மக்களின் உயிர்போன்ற நலன்களுக்கு பாதுகாப்புத் தேடவும், சமாதானத்திற்குப் போராடவுமாக சர்வதேசத் தொழிலாளர் மக்களின் கூட்டுறவை உறுதி செய்யவும், விரிவாக்கவும், கடந்த காலத்தில் நாங்கள் பாடுபட்டு வந்திருக்கிறோம்; தொடர்ந்து பாடுபட்டுவருவோம்.

"என்றாலும், நாங்கள் கம்யூனிச சமூக அமைப்பை எவர் மீதும் திணிக்கவில்லை; ஆனால், வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், கம்யூனிச சமூக அமைப்புத்தான் மிகச் சிறந்தது என நாங்கள் கருதுகிறோம்,"

*—என்று, சோவியத் ரஷ்யத் தலைவர்களான பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டுச் செயலாளர் குருஷ்சேவ் ஆகிய இருவரும் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்திருக்கின்றனர்.*

*இந்தத் தகவலை எல்லாம் அவர்கள், பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலாகத் தந்திருக்கின்றனர்.*

*பத்திரிகையாளரிடம் பேசிய அவர்கள், கோவா, காஷ்மீர், ஆயுதக் குறைப்பு இவைபற்றியெல்லாம் தங்களது கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.*

பண்டித நேரு கடந்த ஜூலைத் திங்களில் ரஷ்யாவிலிருந்து திரும்பியதும், பத்திரிகையாளரிடம் பேசுகையில், "'பஞ்சசீல'க் கொள்கைகளுக்கு 'கோமின்பார்ம்' அமைப்பு ஒத்துவரக்கூடியதன்று—முரண்பட்டதாகும்; ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற 'பஞ்சசீலக் கொள்கை'களுக்கு முரண்படாமல், 'கோமின்பார்ம்' இயங்க முடியாது; எனவே, 'பஞ்சசீலம்' நடைமுறைக்கு வரும்போது, கோமின்பார்ம்'

(4-ம் பக்கம் பார்க்க)

# கவர்னர் பிரகாசாவின் நீலிக்கண்ணீர்

## இயற்கை கொடுமை விளைந்தபோது இங்கு இல்லாததற்கு வருந்துகிறாராம்

### குடுகுடுப்பைக்காரர் காட்டிய கருணை

*நிவாரண வேலையில் கழகத்தோழர்களின் தீவிர ஈடுபாடு*

கிழக்குக் கடற்கரையில் தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் வீசிய புயலினால் உயிரிழந்தோர் தொகை 500 என்று மதிப்பிடப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் சுப்பிரமணியம் திருப்பூரில் பேசியிருக்கிறார்.

வரும் டிசம்பர் 17-ந் தேதியன்று மாநில சர்க்கார் பல துறை அதிகாரிகளும் கூடும் மாநாடு ஒன்று நடைபெறவிருப்பதாயும், அப்போது உண்மையான நிலவரங்கள் தெரிந்துவிடக் கூடும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்த சென்னை கவர்னர், புயல் ஓய்ந்து—மழை நின்று—வெள்ளம் வடிந்த பின்னர் 14-ந் தேதியன்று சென்னை திரும்பினார். அன்றையத் தினமே அதிகாரிகளைச் சந்தித்து நிலைகளை அறிய ஆவல்கொண்டாராம்; ஆனால், அன்று விடுமுறையானதால் 15-ந் தேதியன்றுதான் கோட்டை சர்க்கார் அலுவலகம் சென்று சர்க்கார் செயலாளர்களைச் சந்தித்து நிலைகள் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தாராம்.

மாநிலத்தில் பெரும் கொடுமைகள் நேர்ந்தபோது தாம், தலைநகரில் இருக்க முடியாது போய்விட்டதற்காக வருத்தம் தெரிவித்தாராம்.

*இயற்கையின் கொடுமையினால் விளைந்த கோரங்கள் பற்றி சர்க்கார் அதிகாரிகள் இதுவரை திரட்டியுள்ள விபரங்கள் நம்மைத் திகைக்கிட வைப்பனவாயுள்ளன. இந்த விபரங்கள் இறுதியானவை அல்ல என்றும், மேலும் கணக்கெடுப்பு தொடர்ந்து நடைபெறுவதாயும் கூறப்படுகிறது.*

**குடிசை விடுகளுக்குச் சேதம்**

| | |
|---|---|
| தஞ்சை | 1,62,205 |
| திருச்சி | 29,650 |
| இராமநாதபுரம் | 8 560 |
| மதுரை நகர் | 1,000 |

**கட்டிட விடுகளுக்குச் சேதம்.**

| | |
|---|---|
| திருச்சி | 8,754 |
| தஞ்சை | 160 |

இதர மாவட்டங்களுக்கு இன்னும் விபரம் கிடைக்கவில்லை.

**வேரோடு சாய்ந்த மரங்கள்**

தஞ்சை—4 இலட்சம் தென்னை மரங்கள்.

திருச்சி—29,110 (எல்லா வகைப்பட்ட மரங்கள்)

இராமநாதபுரம்—150

மதுரையில் ஏதும் இல்லை.

**பயிர்களுக்குச் சேதம்**

தஞ்சை—3,000 ஏகர் (நெல்); 1,000 ஏகர் (புகையிலை).

இராமநாதபுரம் – 1 15,537 ஏகர் (நஞ்சை—புஞ்சை விளை நிலங்கள்)

திருச்சி—5,000 ஏகர்.

மதுரை—1,000 ஏகர்.

இப்படித் தரப்பட்டிருக்கும் விபரங்கள்கூடத் தற்காலிகமானவை என்றும், இன்னும் முழு விபரங்களும் கணக்கிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

நிவாரண வேலைகளில் சர்க்கார் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தனி இலாகாக்கள் அமைப்பதும், இடைவிடாது பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைக் கவனிப்பதில் ஈடுபடுவதும் மும்முரமாக நடைபெறுகின்றன.

மாநிலமெங்கணுமுள்ள பொதுநோக்கும், கருணை உள்ளமும் கொண்ட அனைவரும் நிவாரணத்திற்காக தங்களால் ஆனவற்றைச் செய்து வருவது, பாதிக்கப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

**கால்நடைகள் சேதம்**

| | |
|---|---|
| தஞ்சை | 78,357 |
| இராமநாதபுரம் | 12 480 |
| திருச்சி | 5 054 |
| மதுரை | 1,580 |

## ஹீராஸ் பாதிரியார் மறைவு

*சென்னை, டிச. 14—*

திராவிடப் பண்பாட்டுப் பாதுகாப்பாளரும், சிறந்த வரலாற்று வல்லுனருமான ஹீராஸ் பாதிரியார், பம்பாயில் இன்று இயற்கையெய்திய செய்தி கேட்டு மிக வருந்துகிறோம்.

67 வயதான அவர், பம்பாய் புனித சேவியர் கல்லூரியில் வரலாற்று, கலாச்சாரப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்—மிகச் சிறப்புடனும், சீருடனும்.

அவர் 16 ஐரோப்பிய, இந்திய மொழிகள் அறிந்த பன்மொழிப் புலவராயும் விளங்கியவர்.

அவர் மறைவு திராவிட இன மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

—ஆசிரியர்

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—12—'55 வெள்ளி

# வெறும் பாசாங்கு!

ஆங்கில ஏகாதிபத்தியக் காலத்தில், ஆங்கில மொழியே ஆட்சி மொழியாக இருந்து வந்தது. அம்மொழியின் பிடிப்பு இன்னும் இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்தும் வருகிறது.

நமது வாழ்க்கையிலிருந்து அம்மொழியை அறவே அகற்றிவிடுவதற்கு அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குரிய காலவரையறையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆங்கில மொழியை அகற்றிவிட்டு, அம்மொழி இருந்த இடத்தைப் பெறக்கூடிய தகுதி, அரசியல் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற பதினான்கு மொழிகளில் பதின்மூன்று மொழிகளுக்குக் கிடையாது. ஆனால் இந்திக்கு மட்டுமே அந்த உரிமை தரப்பட்டிருக்கிறது.

இந்தி மொழியும் ஒரு தேசிய மொழிதான். வங்கம், தமிழ், ஆந்திரம் ஆகிய மொழிகளும் தேசிய மொழிகள்தான். பெயரில்தான் பொருத்தம் இருக்கின்றதே அல்லாது, அந்தஸ்தில் ஏற்றத் தாழ்வுதான் இருக்கிறது.

அரசியல் சட்டத்தில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கால கெடுவிற்குள் ஆங்கிலத்தை அறவே அகற்றிவிட்டு, அதனிடத்தில் இந்தி மொழியை ஏற்றிவைக்க முடியுமா என்பதில் கருத்துவேற்றுமை பலமாக இருந்துவருகிறது. உத்திரப் பிரதேச இந்தி வெறியர்கள் நீங்கலாக, ஏனையோர் ஆங்கிலத்தை அகற்றும் காலவரையறையை மேலும் சில ஆண்டுகளுக்குத் தள்ளிப்போட வேண்டும் என வாதிடுகின்றனர். அதற்கேற்ற வகையில் குறிப்பிட்ட அரசியல் சட்ட விதியைத் திருத்தவேண்டும் எனவும் முயலுகின்றனர். இப்போக்கை மூர்த்தண்யமாக இந்தி வெறியர்கள் எதிர்க்கின்றனர்.

ஆங்கில மொழிக்கு மேலும் சில ஆண்டுகளுக்கு உயிர்பிச்சை அளிக்கும் வகையில், அரசியல் சட்ட விதி திருத்தப்படத்தான் போகிறது. இந்தி வெறியர்கள் எவ்வளவு தீவிரமாக எதிர்த்தபோதிலும், அவர்களுடைய பேராசையை நிறைவேற்றும் வகையில், ஆங்கிலத்தோடு போட்டியிடும் தன்மையை, இந்தி மொழி இன்னும் பெற்றுவிடவில்லை. அவ்வளத்தை இந்தி என்றாவது ஒரு நாள் பெற்றுவிடுமென, இந்தி வெறியர்களைத் தவிர்த்து, வேறு எந்த மொழியினரும் நம்புவரென, நம்மால் கருத முடியவில்லை.

இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டபோதிலும் கூட, இந்தியப் பேரரசின் உலக உறவுக்கு, அம்மொழி ஒருக்காலும் உதவப்போவது கிடையாது. இந்தியப் பேரரசின் வசதிக்காக, இந்தியைக் கற்றுக்கொள்ள மற்ற நாடுகள் முன்வரப் போவதில்லை. இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு மாகாணங்களைப் பணியவைத்து, அவைகள் மீது இந்தி மொழியைத் திணித்துள்ளது போன்று, மற்ற நாடுகள்மீதும் இந்தியை வலுவில் புகுத்த இந்தியப் பேரரசிற்கு அதிகாரமும் இல்லை.

தாங்களாக மனம் உவந்து இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள மற்ற நாட்டினர் முன்வரப்போவது, என்றும் கிடையாது. அதற்கான தூண்டுதலுக்கு, இந்தி மொழியில் எந்த ஒரு வளமும் அறவே இல்லை.

உலக உறவு இந்தி மொழியால் நிறைவேற்றப்படாத காரணத்தால், உலக மொழியாக உள்ள ஆங்கில மொழியின் துணையும் இந்தியப் பேரரசிற்கு நிச்சயமாகவேண்டும். அதுபோன்றே, உலக அறிவியல் துறைகளைக் கசடறக் கற்க ஆங்கிலமொழியின் துணை நம்மில் ஒவ்வொருவருக்கும் என்றென்றைக்கும் கட்டாயம் இருந்தாகவேண்டும்.

ஆங்கிலத்திற்கு இருந்துவரும் இடத்தை இந்திக்கு மாற்ற மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிக்கு ஒரே ஒரு காரணம்தான் கூறப்படுகிறது. அதாவது, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள மற்ற தேசிய மொழிகளைக் காட்டிலும், இந்தி மொழி பெரும்பான்மையினரால் பேசப்பட்டு வருகிறது என்பதேயாகும்.

பெரும்பான்மையினரால் பேசப்பட்டுவரும் ஒரு காரணத்திற்காக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற விவாதத்தில் உண்மை இருக்குமானால், அதிலும் உலக மக்களில் பெரும்பாலோரால் பேசப்பட்டுவரும் ஒரு மொழியான ஆங்கிலத்தை அகற்ற முயலாமல் அப்படியே வைத்துக்கொள்ள அல்லவா வேண்டும் என்ற ஐயம் ஏற்படுவது இயல்பாகும். பெரும்பாலோர் பேசுகிறார்கள் என்பதற்காக அன்னிய மொழியான ஆங்கிலத்தை அப்படியே வைத்துக் கொள்வது அவமானமானதல்லவா என இந்தி வெறியர்கள் கேட்கின்றனர். அந்நிலை பாரதப் பண்பாட்டிற்கு இழுக்கானது என்றும் அவர்கள் சல்லடம் கட்டுகின்றனர்.

உத்திரப் பிரதேசத்தாருக்கு ஆங்கிலம் அன்னிய மொழியாகக் காணப்படுவது போன்றே, பொதுவாக திராவிடர்களுக்கு; அதிலும் குறிப்பாகத் தமிழர்களுக்கு, ஆங்கிலத்தைப் போன்றே இந்தியும் அன்னிய மொழியாகிறது. அன்னிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதில் எத்தகைய மானக்கேடு இருப்பதாக உத்திரப் பிரதேசத்தார் நம்புகிறார்களோ, அதைக்காட்டிலும் கூடுதலான அளவில் இல்லையானாலும், அதில் கொஞ்சமும் குறையாத அளவு மானக்கேடு அன்னிய மொழியான இந்தியை ஏற்றுக்கொள்வதில் தமிழர்களுக்கு உண்டு. இந்த உண்மையை உத்திரப் பிரதேசத்தார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதற்கு பாரதீயப் பண்பாட்டைச் சமாதானமாகக் காட்டிப் பசப்புவார்கள். நம்மவர்களில் சிலரும் அதற்கு ஒத்து ஊதுவார்கள்—ஊதியும் வருகிறார்கள்.

இந்தியாவின் ஐக்கியத்திற்கு இந்தி மொழி கட்டாயத் தேவையாகும் என, மற்ற மொழியினர்மீது இந்தியைத் திணிப்பதற்கு ஒரு சமாதானம் கூறப்படுகிறது. இந்திய ஐக்கியத்தை விருப்புடன் ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள், இந்தி மொழியையும் ஏற்றுக்கொண்டு தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

இந்திய ஐக்கியத்தை முழுமூச்சுடன் ஒப்புக்கொண்டபோதிலும், இந்தித் திணிப்பை ஒப்புக்கொள்ள அவர்களில் சிலர் தயங்குகிறார்கள். அத்தயக்கத்திற்கு அவர்களுடைய தாய் மொழிப்பற்று மட்டுமே காரணமாகும் எனத்தான் முதற்கண் தோன்றும். நுணுகி ஆராய்ந்தால் மற்றொரு உண்மையும் விளக்கமாகும். அதாவது, தாய் மொழியைத் தவிக்க விட்டுவிட்டு, இந்தியைச் சுமந்துத் திரிய சம்மதித்தால், அரசியல் துறையில் தமக்குள்ள செல்வாக்கு மணல் மேடுபோல் ஒரு நொடியில் சரிந்து போகும் என்பதை அவர்கள் திண்ணமாக அறிவார்கள். அச்செல்வாக்குச் சரிவுக்கு, தங்களை பலியாக்கிக் கொள்ள ஒருப்படாத காரணத்தினாலேயே, தாய் மொழிக்கு ஏற்றம் தேடப்போவதாகப் பறையறைவித்து வருகிறார்கள்.

இந்திய ஐக்கியம் என்ற கோட்பாட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை ஒருவருக்கு இருக்கின்றவரையில், இந்தித் திணிப்பை ஒருவர் ஏற்க மறுக்கிறார் என்பது ஏற்க முடியாத ஒன்றாகும். அத்தகையவரின் தாய் மொழி வளர்ப்பு முயற்சியும் ஐயத்திற்குரியதேயாகும்.

இந்திய ஐக்கியக்கோட்பாட்டைக் கைவிடுவதில்தான், தாய் மொழிக்காப்பு அடங்கி இருக்கிறது. முந்தியதைக் கைவிட இணங்காது, தாய்மொழியை மட்டும் தரணி ஆளவைக்கப் போகிறோம் எனப் பேசுவது துளியும் பொருந்தாது.

இந்திய ஐக்கியத்தில் இந்தி மொழி ஒன்றிப் போய் இருக்கிறது. ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாது.

இந்தி, அகில இந்திய ஆட்சி மொழியாக அரசோச்சும் வேளையில், இளமைக்குன்றா இன்பத் தமிழ் இடர்பட்டுக் கிடக்க வேண்டியதுதான்—இருளில் மங்கிக்கிடக்க வேண்டியதுதான்!

இந்திய ஐக்கியத்தை உதறித் தள்ளாமல், இந்தி மொழியைக் குறிப்பிட்ட வரம்புக்குள் கட்டிப்போட்டுவிட்டு, தாய்மொழியைத் தரணி ஆளச் செய்வது முடியாது. அது வெறும் பாசாங்கு!

---

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தலைவராயிருந்து அண்மையில் ஓய்வு பெற்றுக் கொண்ட அட்லிக்குப் பதிலாக தலைவர் பதவிக்கு ஹூக்கெயிட்ஸ்கெல் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

---

# 'இந்தி இன்னும் தகுதி பெறவில்லை'

## 'அவசரப்பட்டு ஆட்சி மொழி ஆக்கலாகாது'

### இந்திய வணிகர் சங்க எச்சரிக்கை

பம்பாய், டிச. 13—

"இந்தியாவில் ஏராளமான மக்கள் பேசும் மொழியாக இந்தி இருந்தபோதிலும்கூட, அதை நாட்டின் அரசாங்க மொழியாக ஏற்கும் அளவுக்கு, அம்மொழி இன்னும் பக்குவமும், தகுதியும் பெறவில்லை.

"இந்தியை மத்திய அரசாங்க மொழியாக ஆக்குவதற்கு முன்பு, முதலில் அம்மொழியை நாடெங்கும் பரப்ப வேண்டும்; ஆனால், அதே சமயத்தில், இந்தி பேசாத பகுதி மக்களுக்கு வசதிக் குறைவையும், தொல்லையையும் விளைவுக்கும் அளவுக்கு விரைந்து, அவசர உணர்ச்சியுடன் இந்தியை ஆட்சி மொழியாக்கக்கூடாது.

"15-ஆண்டுகட்குப் பின்னர்தான் இந்தி அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. அதுபோன்று, 15-ஆண்டுகள் முடிவுற்ற பிறகு, இக்காலத் தவணையை மேலும் நீடிப்பது அவசியந்தானா என்பதுபற்றி புனர்ப் பரிசீலனை செய்து, அவசியமானால் கால அவகாசத்தை மேலும் நீடிக்க வேண்டும்."

—இவ்வாறெல்லாம், இந்தியை மத்திய அரசாங்க மொழியாக்கும் பிரச்சினையைப் பற்றி, நாடெங்கும் விசாரணை நடத்துதற்காகத் திரு. பி. ஜி. கேர் தலைமையில், 'அரசாங்க மொழிக் குழு' என்ற பெயரில் நியமிக்கப்பட்டிருக்கும் குழுவினரிடம்' இந்திய வணிகர் சங்கம் அளித்துள்ள மனுவொன்றில் வலியுறுத்திக் கூறியுள்ளதுடன், எச்சரிக்கையும் செய்திருக்கிறது.

---

# மத்திய சர்க்காருக்குக் கீழ்ப்படிய பஞ்சாப் மாநில சர்க்கார் மறுப்பு!

## பக்ரா-நங்கல் ஊழலை விசாரிக்க குழு தேவையில்லையாம்!

சந்திகார், டிச. 13—

பக்ரா-நங்கல் திட்டத்தை அமுல் செய்வதில் இலஞ்ச ஊழல் தாண்டவமாடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டதை ஒட்டி, குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய உயர்தர அதிகாரக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்கார் தெரிவித்திருந்த யோசனையை ஏற்பதற்குப் பஞ்சாப் மாநில சர்க்கார் மறுத்துவிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப் மாநில சர்க்கார் நீர்ப்பாசன, மின்சாரத் துறை அமைச்சரான லெஹ்ரி சிங், கடந்த திங்களில் அப்படி ஒரு குழு நியமிக்க வேண்டும் என்பதை நேரடியாகவே ஒப்புக்கொண்டிருந்தார்; ஆனால் அவர் திட்டத்தை ஏற்க மாநில சர்க்கார் மறுத்துவிட்டிருக்கிறது.

'மாநிலப் போலீஸ் தலைமை அதிகாரியான டி. சி. லால் என்பாரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இலஞ்ச ஒழிப்பு நிறுவனமே பக்ரா-நங்கல் திட்டத்தில் ஏற்பட்டுள்ள ஊழல்களைக் கண்டுபிடிக்கப் போதுமானது' என்று மாநில சர்க்கார் கருதுகிறதாம்.

இதற்கிடையில், மத்திய சர்க்கார் திட்டத்துறை அமைச்சரான குல்ஜாரிலால் நந்தாவுடன் இது குறித்துத் தமக்குள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பஞ்சாப் மந்திரி லெஹ்ரி சிங், டெல்லிக்குப் பயணமாகிறார். பஞ்சாப் முதன் மந்திரி சச்சார், ஏற்கனவே டெல்லியிலிருப்பதாயும், அவரும் பேச்சுக்களில் கலந்துகொள்வார் என்றும் கூறப்படுகிறது.

---

# இந்துமதவெறியர் போக்கு!

## பசு வதையைத் தடுக்கச் சட்டம்

### பத்து மாநிலங்கள் நிறைவேற்றியுள்ளனவாம்!

புதுடில்லி, டிச. 14—

பசு வதையைத் தடை செய்து ஏற்கனவே பத்து மாநில சர்க்கார்கள் சட்டம் நிறைவேற்றியிருப்பதாக உணவு விவசாயத் துறை அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயின், மக்கள் சபையில், பகவத் ஜா என்பாரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், மைசூர், இராஜஸ்தான், ஆஜ்மீர், போபால், பெப்சு, திரிபூரா, மணிப்பூர் ஆகியவைகள்தான் அந்தப் பத்து மாநிலங்களுமாகும்.

மேலும் பீகார், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள், சட்ட சபையில் இதற்கான மசோதா ஒன்றைக்கொண்டு வந்திருக்கின்றன.

---

# இறக்குமதிக்குத் தடை விதித்த இலங்கை!

## மீண்டும் தென்னாட்டிலிருந்து வெங்காயம் பெற முயற்சிக்கிறது

கொழும்பு, டிச. 15—

இலங்கை உணவு இலாகா, தென்னாட்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

கிறிஸ்துமஸ் விழாவின்போது ஏற்படும் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகவே இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

வெங்காய இறக்குமதிக்கு இவ்வாண்டு அக்டோபரில் இலங்கை அரசாங்கம் அறவே தடைவிதித்தது; இத்தடையின் காரணமாக, இலங்கை மார்க்கெட்டை இழந்திருந்த இந்திய ஏற்றுமதி வர்த்தகர்களுக்கு தற்காலிகமாகச் சிறிது நிவாரணம் கிடைக்கக்கூடும்.

---

**வாடிடும் மக்களுக்கு வாழ்வளிக்க வாரீர்!**

# புயல்-வெள்ள நிவாரணம்

## நடிகமணிகள் செலுத்தும் பங்கு

## கழகத் தோழர்களின் ஆர்வம் மிகுந்த பணி

தமிழகத்தில் வீசிய புயல்—பெருமழை இவற்ருல் பாதிக்கப்பட்டு அவதியுறும் மக்களுக்கு நிவாரணம் தேடித் தருவதில், நல்ல உள்ளம் கொண்டோர் அனைவரும் தங்களால் ஆன உதவியைத் தர முன் வந்திருக்கின்றனர்.

தி. மு. கழகத் தோழர்களும், அனுதாபிகளும், பொதுச் செயலாளர் அறிக்கைக்கு ஒப்ப, மிகுந்த ஆர்வத்துடன் ஆங்காங்கே நிதி திரட்டி அனுப்புவதும், துணிமணிகள், உணவுப் பொருள்கள் சேகரித்து உரியவர்மூலம் அனுப்புவதிலும் ஈடுபட்டிருப்பதுடன், தீவிரமாக நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர். தங்கள் கடமையை உணர்ந்து, தங்கள் பங்கினைச் செலுத்திவருகின்றனர்.

இதர நடிக-நடிகையருடன் சேர்ந்து கூட்டாகமட்டுமின்றித் தனிப்பட்ட முறையிலும் தங்களால் ஆன அத்தனை வழிகளிலும் நிவாரணம் தேடித்தரும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நடிப்பு, இசைப் புலவர் கே. ஆர்- இராமசாமி ரூ. 1,000 அன்பளிப்புத் தந்திருக்கிருர்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் சென்னையில் ரூ. 1,000 வழங்கியதன்றியில், மதுரையில் வேறு ரூ 500 வழங்கியிருக்கிருர். அத்துடன் நின்றுவிடவில்லை ; மதுரையில், தோழர் எஸ். முத்து, மற்றும் கழகத் தோழர்கள் மட்டுமின்றி, நகரசபைத் தலைவர், மற்றும் உறுப்பினர்களுடன் வீதி வீதியாகச் சென்று, நிவாரண நிதி திரட்டியிருக்கிருர்.

*சென்னையிலும், மற்றும் ஊர்களிலும் கழகத் தோழர்கள் —அனுதாபிகள், நிதி திரட்டுவதில் ஈடுபட்டும், குழுக்கள் அமைத்துப் பணியாற்றியும் வரும் செய்திகள் இங்கு தரப்படுகிறது :—*

### சென்னை 8-வது வட்டம்

11—12—55 காலை $8\frac{1}{2}$ மணிக்கு 8-வது வட்ட தி. மு. கழகம், மக்கள் மன்றம், திருவள்ளுவர் முன்னணி கழகம், திருவள்ளுவர் முத்தமிழ் கழகம், மற்றும் ஏனைய கழகங்களின் தோழர்கள், பெத்துநாய்க்கன்பேட்டையில் ரூ 100-ம், 2,140 துணி உருப்படிகளும், 120 படி அரிசியும் திரட்டினர்.

### சென்னை 29, 30-வது வட்ட தி. மு. கழகம்

11—12—55 காலையில், நகர சபை உறுப்பினர் தோழர் அ. பொ அரசு தலைமையில் ஊர்வலமாகச் சென்று, ரூ 200—3—2ம், 1,086 துணி உருப்படிகளும், 88-படி அரிசியும் சேகரித்தனர்.

### 14-வது வட்ட தி. மு. க.

8—12—55 முதல் 18-12-55 வரை கழகத் தோழர்கள் நிவாரண நிதித் திரட்டும் பணியில் முனைந்துள்ளனர். போதிய உதவி அளிக்குமாறு பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

### சென்னை பொது நல ஊழியர் சங்கம்

11—12—55 காலை 9 மணிக்கு ஆனைகவுனி பொம்முலெய்யர் தெரு சங்கக் கட்டிடத்திலிருந்து சங்கத் தோழர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு, 16-வது வட்ட வீதிகள் வழியாகச் சென்று நிதி திரட்டினர் ; இடையில் மேயர் ஆர். இராமநாத அய்யர், நகர சபை உறுப்பினர் எம். கே. நாகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். ரூ. 648-ம், 3 000 புதிய-பழைய துணிகளும், 5 மூட்டை அரிசியும், $\frac{1}{2}$ மூட்டை கோதுமையும், 2 படி கேழ்வரகும் திரட்டினர். இப்பணியில், தி மு. கழக உறுப்பினர்களான சி. பஞ்சாட்சரம், டி பாண்டியன், சி. சந்தானம், வி. என் ராசன். மாணிக்கம், எ கிருட்டிணசாமி, ஆதிசேசவலு ஆகியோர் குறிப்பிடத்தக்க அளவில் பங்கு பெற்றனர்.

### சென்னை மீனவர் இளைஞர் முன்னணி

12—12—55 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சென்னை—இராயபுரம் மனைமரத் தொட்டியில் நடைபெற்ற மீனவர் இளைஞர் முன்னணியின் (மீனவர் கல்வி உதவி நிதி)யின் செயற்குழு கூட்டத்தின்போது, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்ததுடன், புயல் நிவாரண நிதிக்கு மீனவர் கல்வி உதவி நிதியின் சார்பில் ரூ 5 அனுப்பப்பட்டது.

### சென்னை இளைஞர் நாடக மன்றம்

11—12—55 காலை, தோழர் கே. அர்ஜுனன் தலைமையில், தோழர்கள் மு. வரதராசன், நாகராசன், நடராசன், தருமலிங்கம், எஸ் எ. கேசன் ஆகியோர் வீதிகள் தோறும் சென்று ரூ 119-8-10, 530 துணி உருப்படிகள், 78 படி அரிசி திரட்டினர்.

### சென்னை 11-வது வட்ட முத்தமிழ் மன்றம்

11—12—55 காலை 9 மணிக்கு ஊர்வலமாக வட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் சென்று 1,141 புதிய—பழைய துணிகள், $55\frac{3}{4}$ படி அரிசி, ரூ. 81—3—0 திரட்டினர்.

### திண்டுக்கல்

திரு. டி. எம். எம். துரைராஜ் (செயலாளர்) அவர்கள் தலைமையில் நிவாரண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது சுமார் ரூ 7000-மும், 3000 செஜம் துணியும், மற்றும் பழைய துணிகளும், தானியங்களும் வசூலாகியுள்ளதாம். திரு. கே. வி. மச்சகேந்திரன் அவர்கள் (காடார்கிளப்) 3 மூட்டை சோளம் நன்கொடையாக அளித்துள்ளார். மேலும் வசூல் வேலை தீவிரமாக நடைபெற்றுகொண்டு வருகிறது. தி. மு. க. தோழர் பி. சமதர்மம் நிதி வசூல் குழுவினருடன் தீவிரமாகப் பணியாற்றுகிருர்.

### துறையூர்

11—12—55ல், துறையூர் பாரதி தியேட்டரில் திரு. எ. வி. அரங்கசாமி தலைமையில் நடைபெற்றதோர் கூட்டத்தில், எல்லாக் கட்சித் தோழர்களையும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, நிவாரண நிதி திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

### திருச்செங்கோடு

எல்லாக் கட்சித் தோழர்களையும் கொண்டதோர் குழு அமைக்கப்பட்டு, நிவாரண நிதி வசூலில் ஈடுபட்டனர். ரூ. 400-ம், துணிகளும் திரட்டப்பட்டுள்ளதாக இவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் டி. கே. நடேசன் நமக்கு அறிவித்துள்ளார்.

### தாராவி—பம்பாய்

11—12—55 இரவு 8 மணிக்கு நடைபெற்ற கூட்டமொன்றில், தோழர் பா. சு. முத்துசாமி தலைமையில், புயல் நிவாரணக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

### வேண்டுகோள்

தென்னிந்தியக் கலைஞர்கள் புயல் நிவாரண நிதிக் குழுவினர், தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் எல்லாவற்றிற்கும் போதுமான ஒத்துழைப்பைத் தருமாறு பொதுமக்களை கோரியுள்ளதுடன். இயன்ற அளவில் உதவி தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### 'முத்துப்பேட்டைக்கு உதவி தாரீர்'

முத்துப்பேட்டையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் ஏராளமான அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ள தென்றும், நடுத்தர—ஏழை மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர் என்றும், சர்க்கார் உடனடியாக இப்பகுதியில் நிவாரண வேலையில் ஈடுபடுமாறு கோரியும், முத்துப்பேட்டை தி. மு கழகப் பொதுக் குழு உறுப்பினர் ந. தருமலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இலங்கை தி. மு. கழக அனுதாபம்

புயல் — மழை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழக மக்களுக்கு, இலங்கை தி. மு. கழகச் சார்பில், இலங்கை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. அதிமணி அவர்கள், ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய-சீன இரயில் இணைப்பு

லண்டன், டிச 14—

ரஷ்யாவையும், செஞ்சீனத்தையும் இணைக்கும் புதியதொரு இரயில் வழித்தொடர் அமைக்கப்பட்டு வருவதாயும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த வேலை முடிந்துவிடும் என்றும், நவசீன செய்தி நிறுவனம் தகவல் தந்திருக்கிறது.

இந்த இரயில்தொடர் 'சோவியத் எல்லைக்குள் உள்ள அல்மா அதா பகுதியினைத் தொடும் என்றும்' அங்குள்ள ரஷ்ய இரயில்வேக்களுடன் இணைப்புப் பெறும் என்றும் கூறப்படுகிறது.

போக்கு - வரத்துக்கு, இந்த இரயில் பாதை இந்த ஆண்டு இறுதிக்குள் உபயோகத்திற்கு வருமாம்.

# 'கோவா இந்தியாவின் பகுதியே'

## குருஷ்சேவ் மீண்டும் உறுதி செய்கிருர்

புதுடில்லி, டிச. 13—

"கோவா இந்தியாவின் ஒரு பகுதிதான் ; நியாயமாக, இந்தியாவைச் சேரவேண்டியதே கோவா ; எந்த ஒரு நாட்டிற்கும் இதர நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த அதிகாரம் இல்லை.

"கோவாவில் போர்ச்சுகல் ஆதிக்கம் செலுத்துவதை நான் முன்பு கண்டித்தேன் ; ஏனெனில், அது உண்மையில் இந்தியாவிற்குச் சேரவேண்டிய பகுதியாகும்.

"கடந்த 405 ஆண்டுகளாக போர்ச்சுகல் கோவாவில் இருக்கிறது என்ற வாதம்,'தொடர்ந்து கோவா போர்ச்சுகல் வசம் இருக்கவேண்டும்'' என்று கூறுவதற்குப் போதுமானதல்ல—சரியானதல்ல—பொருந்தக் கூடியதல்ல."

என்று சோவியத் கம்யூனிஸ்டு செயலாளர் நிகிதா குருஷ்சேவ் மீண்டும் இங்கு குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் கூறியதாவது :—

"கோவா பற்றி குறிப்பாகவும், காலனி ஆதிக்கம் பற்றி பொதுவாகவும் நான் தெரிவித்த கருத்துக்கள் அமெரிக்கருக்கும், இதர சில நாட்டவருக்கும் பிடிக்கவில்லை; அதனுல் ரஷ்யாவிற்கு எதிராக ஏதேதோ பேச முற்பட்டிருக்கின்றனர்.

"நான் கூறியதெல்லாம், ஒரு நாட்டை இன்னொரு நாட்டின்மீது தூண்டிவிட வேண்டும் என்பதற்காக அல்ல ; அமெரிக்காவுடனும், பிரிட்டனுடனும் நல்ல உறவுகள் நீடிப்பதையே நான் விரும்புகிறேன் ; ஆனுல், அதற்காக நான் உண்மையைச் சொல்லாமலிருக்க முடியாது.

"நான் எதைச் சரியென்று நினைக்கிறேனே அதைச் சொல்லிக் கொண்டுதானிருப்பேன். நான் கூறுவது கண்டு சில நாட்டவர் சீறுவதாலோ, சிலர் வெறுப்பதாலோ அதனை நிறுத்திவிடமாட்டேன் — கவலைப்படமாட்டேன்."

# சீனத் திட்டங்களை நிறைவேற்றிய ரஷ்யப் பொறியியல் நிபுணர்கள்

## இந்தியாவிற்கு தேவையில்லையாம்!

### திட்டத் துறை அமைச்சர் நந்தா விளக்கம்

புதுடில்லி, டிச. 13—

"செஞ்சீனுவின் நதிப் பள்ளத் தாக்குத் திட்டங்களில் தொழில் நுணுக்க விசேடம் எதுவும் இருக்கவில்லை ; எனவே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றிய ரஷ்ய எஞ்சினியர்களை, இந்தியாவில் நியமித்துக்கொள்ள வேண்டும் என்பது அவசியமல்ல,''

என்று, திட்டத் துறை அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா தெரிவித்திருக்கிருர்.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினரான சிப்பன்லால் சாக்சேனு என்பார், 'சீனுவில் கட்டப்பட்ட நதிப் பள்ளத் தாக்குத் திட்டங்கள் சிக்கனமாக அமைந்தன என்பதால் அவற்றை அமைத்த ரஷ்ய எஞ்சினியர்களைக் கொண்டே இந்தியாவின் நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களைப் பூர்த்தி செய்யவேண்டும்,' என்று மக்கள் சபையில் கோரியதற்குப் பதிலளிக்கும் போதுதான், அமைச்சர் நந்தா மேற்கண்டவாறு கூறியிருக்கிருர்.

மக்கள் சபையில் நீர்ப்பாசன, மின்சாரத் துறையினர், ரூ - 6,87,800 வரை உபமானியம் கோரியபோதுதான், சாக்சேனு இந்த யோசனையைத் தெரிவித்தார்.

# கோவா 'காலனி' அல்லவாம்

## போர்ச்சுகலின் மாகாணம்தானும் !

### வெளி விவகார மந்திரி கொக்கரிக்கிருர்

ஒட்டாவா, டிச 14—

"கோவா போர்ச்சுகலின் ஒரு மாகாணமாகும்; இந்தியா, ரஷ்யா கோருவதைப்போல, அது ஒரு காலனி அல்ல ;

"கோவாவில்நாங்கள்நிலைப்பதற்கு மானசீகமான காரணங்களும் உண்டு.

"போர்ச்சுகலின் ஒரு பகுதியான கோவாவில் நாங்கள் நிலைக்க நினைப்பதற்குப் பொருளாதார, இலாபம் அல்ல காரணம்.

"தற்போது, கோவாவிற்காக போர்ச்சுகல் சுமார் 10 இலட்சம் டாலர் வரை (ரூ. 47 6 லட்சம்) ஆண்டுதோறும் செலவிட்டுவருகிறது. இதற்குப் பிரதியாக, வரிகள் மூலமாக போர்ச்சுகல் கோவாவிலிருந்து எதுவும் பெறவில்லை,"

என்று, போர்ச்சுகல் அயல்நாட்டு மந்திரியான டாக்டர் பௌலோ குன்ஹா பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"கோவாவை இந்தியா தாக்குமானுல். போர்ச்சுகல் நிச்சயம், கோவாவைப் பாதுகாக்க முற்படும்.

"ஆயுத பலத்தின் மூலமாக கோவாவைப் பெற இந்தியா முயற்சிக்காதென எண்ணுகிறேன். அப்படிச் செய்தால் அது அநீதியானது — தவருனது. மேலும், சர்வதேசச் சட்டங்களை மதிக்கிற ஒரு சமாதானம் விரும்பும் அரசாங்கம் என்ற பெயருக்கு முரணானதாகும்.

"போர்ச்சுகல், கோவாவை இழந்துவிடுமானுல், அது, மேற்கத்திய நாடுகள் ஒரு சுதந்திர நாட்டை இழந்துவிடுவதற்கு ஒப்பாகும்.

"இந்தியாவிற்கும் — கோவாவிற்கும் இடையில் இப்போதுள்ள சிக்கல்களைக் கம்யூனிஸ்டுகள் பகைமையை வளர்ப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

"ஆசியாவிலிருந்து மேற்கத்தியரைப் பிரித்துவிட கம்யூனிஸ்டுகள் மேற்கொண்டுள்ள முயற்சியின் ஒரு பகுதியே இந்தச் செயலாகும்"

"ஆப்பிரிக்காவில் தனது பிடிப்பை, இந்தியா விரிவுபடுத்தும் ஆபத்தும் இருக்கிறது.

"மேற்கு நாடுகள் ஆப்பிரிக்காவில் உள்ள பகுதிகளில் எவற்றையேனும் இழந்துவிடுமானுல், அது மிகவும் ஆபத்தானதாகும் ; ஏனெனில், ஆப்பிரிக்கக் கண்டம், உலகின் மிகப் பெரிய இயற்கைவளம் மிகுந்த பகுதிகளில் ஒன்ருகும்.

"மேற்கத்திய உலகத்தவருக்கு ஆப்பிரிக்காவின் தொடர்பு மிக இன்றியமையாததாகும்."

# ரூ. 60 இலட்சம் பெறுமான விவசாய இயந்திரச் சாதனங்கள்

## இந்தியாவிற்கு ரஷ்யா அன்பளிப்பு

சோவியத் ரஷ்யா இந்தியாவிற்கு சுமார் 50 முதல் 60 இலட்சம் ரூபாய் வரை மதிப்புடைய விவசாய இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கும் என்று தெரியவருகிறது.

இது குறித்து ரஷ்ய விவசாயத் துறை துணை அமைச்சர் ரருலாவ் என்பார், இந்திய விவசாயத்துறை அமைச்சர் அஜீத் பிரசாத் ஜெயினுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது.

ரஷ்யா வழங்கும் இயந்திர சாதனங்களைக் கொண்டு, ஒரு பண்ணை துவக்கப்படும் என்றும், இயந்திர சாதனங்களை அனுப்புவது பற்றிய வழிமுறைகள் தொடர்ந்து விவாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

# இன்னலுறுவோருக்கு இயன்றளவு தாரீர்!

# 'இலங்கை-இந்தியா ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட வேண்டும்'

## இலங்கை சர்க்கார் கருத்து?

கொழும்பு, டிச. 15—

இலங்கைவாழ் 'இந்தியர்'களின் எதிர்காலம் குறித்த இந்தியா—இலங்கை ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்துவிடவேண்டும் என்று இலங்கை சர்க்கார் கருதுவதாக இங்கு அரசியல் வட்டாரங்களில் யூகிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமர் நேரு, ஒப்பந்த அமுல் குறித்து இறுதியாக எழுதியிருந்த கடிதத்திற்கு இலங்கை சர்க்கார் பதில் தயாரித்து வருகின்றனர் என்றும், அந்தப் பதில், மந்திரி சபையின் கடந்த கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது என்றும், இன்னும் இரண்டொரு நாட்களில் இறுதியாகப் பதில் தயாரிக்கப்பட்டுவிடும் என்றும் கூறப்படுகிறது.

'நாடற்றவர்' என்று கூறப்படுபவர்களை இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ள இந்திய சர்க்கார் மறுக்கிறது; இருதரப்பாரிடையேயும் 'பரஸ்பரம்' அவநம்பிக்கை நிலவுகிறது; இந்தச் சூழ்நிலைகளில், நிறைவேற்றி வைத்துள்ள ஒப்பந்தங்களால் இலங்கைக்கு ஒரு பயனும் இல்லை—என்றே சர்க்கார் கருதுகிறதாம்!

'ஒப்பந்தங்களைக் கைவிட்டு விடுவதுபற்றி பண்டித நேரு என்ன கருத்துக் கொண்டிருக்கிறார் என்பதைத்தெரிவிக்குமாறும் இலங்கை சர்க்கார் பதில் அமையும்'-என்று, 'காலை மணி' என்ற ஒரு இதழ் தகவல் தந்திருக்கிறது.

இலங்கையில் இலங்கைக் குடி உரிமை பெறாமலும், இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்யப்படாமலும் தங்கிவிடக் கூடிய 'நாடற்றவர்கள்' பற்றித்தான் இலங்கை சர்க்கார் அதிகம் கவலைப்படுவதாயும், அதனால்தான் ஒப்பந்தங்களை அமுல் செய்வது இலங்கை சர்க்காருக்குக் கடினமாயிருப்பதாயும் கூறப்படுகிறது.

இந்த 'நாடற்றவர்' என்ற சிக்கல் புதியது என்றும், 1927-ம் ஆண்டில் எல்லாம் இது இருந்ததில்லை என்றும் இலங்கை கருதுகிறதாம்.

"இந்தியக் குடிமக்களாகவே இருக்க விரும்புகிறவர்களை எல்லாம், அப்படிப் பதிவு செய்துகொள்வதற்கு, ஒப்பந்தங்களுக்காகப் பேச்சு வார்த்தைகள் நடத்திய காலத்தில் இந்தியா தயாராக இருந்தது; ஆனால் இன்று, இந்தியா, 'தனது அரசியல் சட்டத்திற்கொப்ப புதிதாக நிறைவேற்றியுள்ள குடிமக்கள் உரிமைப் பதிவுச் சட்டப்படிதான் இந்தியக் குடி உரிமை வழங்க முடியும்' என்று கூறுகின்றது; எனவே, தற்செயலாக 'நாடற்றவர்' என்று ஒரு வகுப்பு உருவாகுமானால் அதற்கு இந்தியாவின் அரசியல் சட்டம்தான் காரணம்." என்று, இலங்கை சர்க்கார் கருதுகிறதாம்

"இந்தியாவின் குடி உரிமைச் சட்டம், ஒருமுறைபாகவே பின்பற்றப்படும் என்றுதான் இலங்கை நம்பிற்று: ஆனால், நிலையோ, ஏராளமான இந்தியக் குடிமக்கள் இந்தியக் குடி உரிமை பெறுவதற்குத் தடையாயிருக்கிறது. இப்படி நேருமென இலங்கை நம்பியிருக்கவில்லை; மேலும் இந்தியக் குடி உரிமை கோரும் ஒவ்வொருவருக்கும் போதுமான எல்லா வசதிகளையும் இந்திய சர்க்கார் செய்து தருவர் என்று இலங்கை நம்பிற்று ஆனால், பிரதமர் நேரு, குடிஉரிமை கோரும் மனு நமூனாக்களைக் கூடத் தந்து உதவ மறுத்துவிட்டார்; இந்நிலை, இலங்கையின் நம்பிக்கையைக் குலைத்துவிட்டதுடன், ஒப்பந்தங்கள் இனி பயனில்லாதவை என்றெண்ணும் நிலைக்குங்கொண்டு வந்துவிட்டது."—இப்படி எல்லாம் இலங்கை சர்க்கார் கருதுவதாகக் கூறப்படுகிறது.

---

## சொத்து வரி வழக்குகள்

புதுடில்லி, டிச. 13—

1955 அக்டோபர் இறுதியில் சொத்து வரி சம்பந்தமாக மொத்தம் 2,693 வழக்குகள் முடிவு செய்யப்படாமல் இருந்தன என்றும், அவ்வழக்குகளில் சுமார் ரூ 2,25,00,000 சம்பந்தப்பட்டிருந்ததென்றும், 1955 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து 1955 அக். 31-ந் தேதி வரையில் மொத்தம் ரூ 56,04,375 சொத்து வரி வசூலிக்கப்பட்டிருக்கிறதென்றும், மாமன்றங்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

---

## மேலூரில் பொதுச்செயலாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைச் சேகரித்துக்கொண்டு, நிவாரண வேலைகளில் இயக்கத் தோழர்களை ஈடுபடும்படித் தூண்டி, இரவு 8½ மணிக்கு மதுரை பயணமானார்கள்.

14—12—55 காலை 9 மணிக்கு மதுரையிலிருந்து புறப்பட்டு, மேலூர் வட்டத்திலுள்ள திருவாதவூர் சென்று அங்கு சேத நிலைமைகளை நேரில் விசாரித்துக்கொண்டு, நிவாரண வேலைகளில் இயக்கத் தோழர்கள் பொதுமக்களுக்குப் பேருதவி புரிய வேண்டிய அவசியத்தை உணர்த்தி, மேலூர் நகருக்குப் புறப்பட்டார்கள்.

மேலூர் நகரில் அரிசன மாணவர்களுக்கென ஏற்படுத்தப்பட்டுள்ள காந்தியார் மாணவர் தங்கும் விடுதி புயலால் முற்றிலும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. அப்பகுதி மாணவர்களில் ஒருவரான பழனி என்பவர், சேதத்தில் சிக்கி உயிரிழந்தார்; அந்த மாணவர் விடுதியை பொதுச்செயலாளர் அவர்கள் பார்வையிட்டார்கள்; அங்குள்ள மாணவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

பின்பு, நாவினிப்பட்டி, கீழையூர் வழியாக தனியாமங்கலம் சென்றார்கள்; அங்குள்ள இயக்கத் தோழர்கள் பொதுச்செயலாளரை வரவேற்றபின், புயலுக்குப் பலியாகியுள்ள போர்டு ஆரம்பப்பள்ளி தெருக்களில் உள்ள வீடுகள், வாழைத் தோட்டங்களைப் பார்வையிட்டார்கள்.

பின்பு அங்கிருந்து வெள்ளலூர் வழியாக புலிமலைப்பட்டி சென்றார்கள்; அங்கு இயக்கத் தோழர்கள் வரவேற்று தங்கள் கிராமத்தில் ஏற்பட்ட சேதம் பற்றிக் கூறினார்கள். பொதுச்செயலாளரும், நிவாரண வேலைகளில் அவர்களை ஈடுபடும்படி சொன்னார்கள். பின் அங்குள்ள திமு கழக அலுவலகம் சேதமடைந்திருப்பதைப் பார்வையிட்டார்கள்; அதனை புனரமைப்பு செய்யும்படி கூறி, உச்சரிச்சான் பட்டிக்குச் சென்றார்கள்

உச்சரிச்சான்பட்டி பஞ்சாயத்து தலைவர் திரு. வே. முத்தையா அவர்களும், தோழர்கள் மு. கருத்தான், மர்தையன் ஆகியோரும், மற்றும் இயக்கத் தோழர்களும், பொதுமக்களும் கூடி வரவேற்றார்கள். ஊர்ச்சாவடியில் தங்கி சேத விவரங்களைத் தெரிந்துகொண்டு நிவாரண வேலைகளில் தோழர்கள் ஈடுபடவேண்டும் என்று கூறி, விடைபெற்றுக் கொண்டார்கள்.

பின் கோட்டனத்தம்பட்டி, வண்ணான்பாறைப்பட்டி வழி மேலூர் வந்து தோழர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கோம்பைக்குச் சென்றார்கள்.

பொதுச் செயலாளருடன் வந்திருந்த தோழர் சாமுவேல், ஆங்காங்கே ஏற்பட்டுள்ள சேதங்களைப் படம் பிடித்துக்கொண்டார்.

மேலூர் வட்ட சுற்றுப்பணத்தின்போது பொதுச்செயலாளர் அவர்களுடன், தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ, மதுரை மாவட்டச் செயலாளர் எஸ் முத்து, மேலூர் தோழர் சி காதர்வலி அவர்களும் உடன் சென்றார்கள்.

---

## சிறப்புச் சொற்பொழிவு

★

17-12-55 மாலை 5½ மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில், தென்பகுதி இரயில்வே மென் யூனியன் நிதிக்காக, சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை: ரூ. 1, அணா 8.

ஃ ஃ ஃ

18-12-55 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில், புயல் நிவாரண நிதியளிப்பு சிறப்புக் கூட்டம், தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நன்கொடை: ரூ. 1, அணா 8, 4.

---

## கழகக் கூட்டம்

★

வில்லூரணி எஸ்டேட்
தி. மு. க. மூ(ந)லாவது ஆண்டு விழா
18—12—55 ஞாயிறு மாலை
பேசுவோர்:
சிற்றுளி சுப்பிரமணியம்
ஆ. க. வேலவன்
டி. பி. ஜேபக்கனி

---

### பொதுக்கூட்டம்

17—12—55 மாலை 5 மணிக்கு. சென்னை-புது வண்ணை, கிராஸ் ரோடு அருகில், வள்ளுவர் இளைஞர் மன்ற சிறப்பு விழாப் பொதுக் கூட்டம் தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், கண்ணதாசன், சுரதா ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

---

### சென்னை 6-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

18—12—55 காலை 9 மணிக்கு சென்னை 6-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், கழக இல்லத்தில் (எண் 10, வடிவேலு முதலி தெரு, பெரம்பூர்) நடைபெறும். அதுபோது, வரவு-செலவு கணக்கு, உறுப்பினர் சேர்த்தல், திராவிடர் திருநாள் ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

---

### 3-வது வட்ட (வடசென்னை) பொதுமக்களுக்கு வேண்டுகோள்

18—12—55 காலை 8 மணியிலிருந்து வீடுகள்தோறும் சென்னை 3-வது வட்ட தி. மு கழகத் தோழர்கள் உண்டியல் ஏந்தி புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிதி திரட்ட ஊர்வலமாக வருவார்கள் சென்னை-வண்ணை, எண் 32, மணியக்கார் சௌல்ட்ரி ரோடு, கழக மனையிலிருந்து ஊர்வலம் புறப்படும்

---

## 'கோமின்பார்ம்'.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்க முடியாது போய்விடும்; அது அழிந்துபடும்," என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இப்போது ரஷ்யத் தலைவர்கள் தங்களது 'கோமின்பார்ம்' அமைப்பு, 'பஞ்சசீலக் கோள்கை'க்கு முரண்பட்டதல்ல என்ற வகையில், பேசியிருக்கின்றனர். 'சர்வதேச ஏகாதிபத்திய சங்கங்கள், 'சோஷலிஸ்ட் இண்டர்நேஷனல்' என்பன போன்ற அமைப்புகள் ஆகியவற்றைப் போன்றதே இந்த 'கோமின்பார்ம்' என்று கூறுகின்றனர்.

சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கமாக அந்தக் 'கோமின்பார்ம்' கடந்த காலத்தில் மிகுந்த 'அபக்கியாதி' பெற்றிருப்பதால், அது நீடிக்கத்தான் செய்யும் என்ற ரஷ்யத் தலைவர்களின் அறிவிப்பு, டெல்லி வட்டாரங்களுக்குத் திருப்தியளிக்கவில்லையாம்!

---

## இந்தியாவின் 'ஒற்றுமை'யே முக்கியமாம்!

### மாநில புது அமைப்புப் பற்றி பண்டித பந்த்

புதுடில்லி, டிச. 14—

'மாநிலக் குழுவின் திட்டங்களை அமுல் செய்யாது ஒத்திவைக்க வேண்டும்' என்று சிலரால் கூறப்படுவதைக் கண்டித்து, 'இந்தியத் துணைக் கண்டத்தின் மாநில எல்லைகள் உடனடியாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும்—அதில் தாமதம் கூடாது' என்று பண்டித பந்த், மக்கள் சபையில் பேசியிருக்கிறார்.

மாநிலக் குழுவின் சிபாரிசுகள் குறித்த விவாதத்தினைத் துவக்கி வைக்கும்போதே அவர் அப்படிப் பேசியிருக்கிறார்.

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பது என்ற விஷயத்தைக் கவனிக்கும்போது, முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதெல்லாம் இந்தியாவின் ஒற்றுமையும், பாதுகாப்பும், ஒவ்வொரு தனிநபர்களின் உயர்ந்தபட்ச முன்னேற்றமும்தான்."

என்று, அவர் குறிப்பிட்டாராம் "இந்தியாவிலிருந்த சுமார் 600-சுதேச சமஸ்தானங்கள், ஒரு அமைதியான சூழ்நிலையில் ஒன்றுபடுத்தப்பட்டிருக்கின்றன அதுபோன்ற மிகச் சிக்கலான காரியங்களைச் சுலபமாகச் செய்து முடித்திருக்கும் நாம், மாநில புது அமைப்பையும் அமைதியாகவே செய்து முடிக்க இயலும் என்றே நம்புகிறேன்," என்றும், உள்நாட்டமைச்சரான பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

---

## சென்னையின் சமூக நலத் திட்டங்கள்

### மத்திய கழகம் வழங்கிய மானியம்

சென்னை, டிச. 13—

மத்திய சமூக நலக் கழகம், கடந்த 1953—55-ம் ஆண்டுகளில் சென்னைக்கு மானியமாக ரூ 7,40,550 தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

குழந்தைகள் நலனுக்காக ரூ 3,41,300; பெண்கள் நலனுக்காக ரூ. 1,50,500; குற்றம் புரிந்தோர் நலனுக்காக ரூ 7,50,500; மேலும் பெண்கள் நலனுக்காக ரூ 70,500; மேலும் குற்றம் புரிந்தோர் புனரமைப்புத் திட்டங்களுக்காக ரூ. 1,75,250 ஆகிய தொகைகள், இந்த மானியத்திற்குள் அடங்கும்.

இந்த ஆண்டுகளில் இந்தியா முழுவதிற்குமாக மத்திய சமூக நலக் கழகம் ரூ 76,07,226 மானியம் வழங்கியிருப்பதாயும், இவை 4 பரிசு முகாம்கள் உள்ளிட்ட 2,791 குறிப்பிட்ட திட்டங்களுக்காகத் தரப்பட்டவை என்றும் தெரியவருகிறது.

---

## வேலை கோரி பெயர் பதிவு செய்திருப்போர்

### 15 இலட்சத்திற்கும் அதிகம்

புதுடில்லி, டிச. 14—

இந்தியாவெங்கணுமுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்களில் 1954-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து 1955 ஆகஸ்டு திங்கள் 31-ந் தேதி முடிய உள்ள ஓராண்டுக் காலத்தில் மட்டும், வேலை கேட்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருப்போரின் எண்ணிக்கை 15,23,241 ஆகும்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில், மாநிலங்கள் சபையில் தொழிலாளர்துறை துணை அமைச்சர் அபீத் அலி என்பார் இத்தகவலைத் தந்திருக்கிறார்.

---

## 60,000 டன் உருக்கு

### இந்தியாவிற்கு விற்பனை செய்ய செஞ்சீன முன்வருகிறது

புதுடில்லி, டிச. 15—

"செஞ்சீன சர்க்கார் இந்தியாவிற்கு சுமார் 60 ஆயிரம் டன் உருக்கு விற்பனை செய்யத் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது,"

என்று, மக்கள் சபையில் தொழில் மந்திரி கனுங்கோ தெரிவித்திருக்கிறார்.

விற்பனை நிபந்தனைகள் முதலியன குறித்து இப்போது பேச்சு வார்த்தைகள் நடந்துவருவதாகவும் அவர் தகவலளித்திருக்கிறார்

---

### தமிழ் விழா ஒத்திவைப்பு

காரைக்குடி அழகப்பா கல்லூரி பகுதியில் நடக்கவிருந்த 8-வது தமிழ் விழா, புயலின் காரணமாகக் காலவரையறையின்றி தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக தமிழ் விழாக் குழுச் செயலாளர் தோழர் சா. கணேசன் கூறினர்.

---

## கவர்னர் பிரகாசாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு ஆறுதலைத் தருவதாகும்.

நேற்று முன்தினம் சென்னை நகரில் பல நிறுவனங்கள், அரசியல் கட்சியினர் எல்லாம் கூட்டம் கூட்டமாக வட்டந்தோறும் சென்று பணம், உணவுப் பொருள், துணி மணி முதலியன திரட்டுவதில் வேகமாக ஈடுபட்டனர்.

மக்களும் மிகுந்த ஆர்வத்துடன் தங்கள் தங்கள் சக்திக்கேற்ப உதவியளித்திருக்கின்றனர்.

'நல்ல காலம் வருகுது, நல்ல காலம் வருகுது' என்று வீட்டுக்கு வீடு சென்று 'குறி' சொல்லும் குடுகுடுப்பைக்காரர் ஒருவர், 43-வது வட்டத்தில் நமது கழகத் தோழர்கள் நிவாரண நிதி திரட்டும் வேலையில் ஈடுபட்டபோது, தோழர்களின் பணியின் நோக்கத்தையும், விபரத்தையும் அறிந்தபின், தனக்காக எங்கோ ஒரு வீட்டில் 'குறி' சொன்னதற்கு சன்மானமாகப் பெற்றிருந்த 'கோட்' ஒன்றை தோழர்களிடம் மகிழ்ச்சியோடு அளித்தாராம்.

நான்கைந்து பிள்ளை குட்டிகளுடன் 'கைக்கும் - வாய்க்கும் எட்டினால் போதும்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் போலீஸ்காரர் ஒருவர், 31-வது வட்டத்தில் நமது தோழர்கள் நிவாரண நிதி திரட்டும்போது, தனது இல்லத்திலிருந்து பல துணி மணிகள் அளித்தாராம்—உவகையுடன்; உள்ள நிறையுடன்!

இப்படிப் பலதரப்பட்ட மக்கள் எல்லாம், தங்கள் இனத்தவருக்கு—சோதரர்களுக்கு ஏற்பட்ட சோக நிலை போக்குவதற்குத் தங்களால் ஆன உதவிகள் எல்லாம் செய்வது இயற்கையான இயல்புதான்.

எத்தனையோ நல்லறிவாளர்களுடன் நமது கழகத் தோழர்களும் கூட்டுச் சேர்ந்தும், தனித்தும் நிவாரண வேலைகளில் துரிதமாக ஈடுபட்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அவற்றில் சில விபரங்கள், மூன்றும் பக்கத்தில் தரப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து விபரங்கள் வெளியிடப்படும்.

---

### 'நீதிமன்றம்'—நாடகம்

17—12—55 இரவு 10 மணிக்கு பண்ணிமேடு எஸ்டேட்டில், தோழர் சுப்பையா தலைமையில், பண்ணிமேடு எஸ்டேட் தி. மு. கழகத் தோழர்கள் நடிக்கும் 'நீதி மன்றம்'—நாடகம் நடைபெறும்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.